சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.44/2020

வாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. J. சரஸ்வதி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திருமதி.ஜெயந்தி | க/பெ: மகேந்திரன் | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | முகவரி: | |
| தேதி: | 18.02.2025 | தாலுக்கா: | |

முதல் விசாரணை...

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தில் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 28.09.2000 | இந்திய தேர்தல் ஆணையத்தால் எனக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை | நகல் | பி.வா.சா.ஆ.1 |
| 2 | 16.04.2004 | எனக்கு வங்கி கணக்கு உள்ள நெடுங்காடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பாஸ்புக் | நகல் | பி.வா.சா.ஆ.2 |
| 3 | 2005 – 2009 | குடும்ப அட்டை (அசலுடன் சரிபார்க்கப்பட்டது அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | பி.வா.சா.ஆ.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | -- | எனது ஆதார் அடையாள அட்டை (அசலுடன் சரிபார்க்கப்பட்டது அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | பி.வா.சா.ஆ.4 |

தாவாபடி தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்து சுப்பிரமணியனுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவர் மகேந்திரனுக்கும் இடையே விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்தையும் அதில் உள்ள வீட்டையும் எனது கணவர் மகேந்திரன் சுயமாக சம்பாதித்து தான் வாங்கியதாகும். தாவா சொத்து மகேந்திரன் பெயரில் இல்லை என்றால் சரிதான், எனது மாமியார் பெயரில் சொத்து வாங்கிவைத்தார். வாதி சுப்ரமணியன் சரோஜாவின் சகோதரர் என்றால் சரிதான். வாதி பெயரில் சரோஜா வா.சா.ஆ.1 ஆன செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இடத்தின் உரிமையாளர் சரோஜா வாதி பெயருக்கு சொத்தை எழுதிவைத்த பின்னிட்டு எனக்கு சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 மற்றும் வா.சா.ஆ.16 ல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தின் படி குமாரமங்கலம் கிராமத்தில், ரைஸ்மில் காலனியில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ஆவணத்தில் மேற்சொன்னவாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன முகவரியில் தான் வா.சா.ஆ.15 ஆவணத்தை கையெழுத்து செய்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் வா.சா.ஆ.15 ல் உள்ளது என்னுடைய கையொப்பம்தான். சென்னை உயர்நீதிமன்ற வா.சா.ஆ.14 ஆவணத்திலுள்ள எனக்கும் என் கணவர் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நானும் எனது கணவர் மகேந்திரனும் தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு எதிராக ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குமாரமங்கலம் கிராமத்தில் வசித்து கொண்டு தற்போது தாவா சொத்தைஆக்ரமிக்கவேண்டும் என்றாலும் வாதி சொல்லியும் காலி செய்யாமல் இருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திருமணத்திற்கு பின்னிட்டு மயிலபத்து கிராமத்தில் ஆற்றங்கரை தெருவில் வசித்தோம் என்றால் சரிதான். அந்த வீட்டில் இருக்கும் போதுதான் எனது கணவர் வெளிநாடு சென்றார் என்றால் சரிதான். எனது கணவர் வெளிநாடுசென்ற பின்னிட்டு நான் குமாரமங்கலம் கிராமத்தில் வசித்தேன் என்றால் சரியல்ல. நான் குமாரமங்கலம் கிராமத்தில் தான் வசித்து வருகிறேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சுப்ரமணியன் மயிலம்பத்து கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாதி தாவா சொத்தில் உள்ள வீட்டிலிருந்து என்னை காலி செய்ய அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான வீட்டை காலிசெய்ய சொல்லியும் நான் காலி செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டது எனது தவறான நடவடிக்கையால் தான் விவாகரத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனதுபெரிய மகன் என்னுடன் இல்லை என்றால் சரிதான். வாதி பெண்பேத்தி கிராமத்தில் வசிக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்திலிருந்து எனக்கு இந்த வழக்கில் சம்மன் வந்தது என்றால் சரிதான். வாதிக்கு சொந்த வீடு இல்லை என்பதால் தான் தாவா சொத்தை காலி செய்ய அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது. சுப்ரமணியனை எனக்கு யார் என்றே தெரியாது. வாதி எனக்கும் மகேந்திரனுக்கும் திருமணம் செய்து வைத்தாரா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இதிலுள்ள சங்கதிகள் நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். எதனடிப்படையில் வாதி தனது ஒரே மகனை இழந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் எங்களுக்குள் சண்டை ஏற்படுத்தியதால் சொல்லியுள்ளேன். எனக்கும் ரவி என்பவருக்கும் இடையே தகாத உறவு இருந்து வந்ததன் அடிப்படையில்தான் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது என்றால் தீர்ப்பை இன்னும் நான் பார்க்கவில்லை. ஜீவனாம்ச தொகையை உயர்த்தி தர கோரி நான் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். எனது கணவர் அந்த மனுவை தள்ளுபடி செய்ய மனு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றாலும் எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு விவரம் தெரிந்தே பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எம்.சி.24/2013 ல் எனது வசிப்பிடமாக குமாரமங்கலம்

கிராமத்தை காட்டியுள்ளேன் என்றால் இல்லை. எனக்கு அரசியல்வாதியோடு அதிகப்பழக்கம் இருப்பதால் தாவா சொத்தில் உள்ள வீட்டை அபகரித்துக்கொள்ள நினைக்கிறேன் என்றால் சரியல்ல. 19.08.2014 ஆம் தேதி தாவா வீட்டை பூட்டி வைத்திருந்த போது நான் அடியாட்களுடன் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தேன் என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளவாறு 1993 லிருந்து தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும் 2013 முதல் தான் தாவா சொத்தில் குடியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றாலும் அதை காலி செய்துக்கொடுக்காமல் வீண் பிரச்னை செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கு வரி சுப்ரமணியன் செலுத்திவருகிறார் என்றாலும் நானோ எனது கணவரோ வரி செலுத்தவில்லை என்றாலும் சரிதான். வீட்டு ஆவணங்களை என் கணவர் என்னிடம் காட்டாததால் நான் செலுத்தவில்லை. தாவா சொத்திற்குள்ள மின் இணைப்பும் வாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான்தான் தற்போது கட்டிவருகிறேன். மின்கட்டண ரசீது எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி பெயரில் உள்ளதால் நான் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கதவு எண் 5/20 என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 169/1 குடித்தெரு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பத்து, மயிலம்பத்து தெரு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 169/1 குடித்தெரு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்கள் வீட்டின் முகவரி என்ன என்றால் கதவு எண் முகவரி தெரியாது. தாவா சொத்து வீட்டின் கதவு எண் 188 என்றாலும் பி.வா.சா.ஆ.1 முதல் 4 வரையுள்ள ஆவணங்களை தவிர கதவு எண்ணும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் விவாகரத்து ஆகிவிட்டதால் தாவா

சொத்தில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள வீட்டை வாதி கட்டினார் என்றாலும் எனது கணவருக்கு எந்தவித வருமானமும் இல்லை என்றாலும் சரியல்ல. எனவே தாவாபடி வாதிக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.